Padasalai's Telegram Groups!

(தலைப்பிற்கு கீழே உள்ள லிங்கை கிளிக் செய்து குழுவில் இணையவும்!)

- Padasalai's NEWS - Group

https://t.me/joinchat/NIfCqVRBNj9hhV4wu6_NqA

- Padasalai's Channel - Group

https://t.me/padasalaichannel

- Lesson Plan - Group

https://t.me/joinchat/NIfCqVWwo5iL-21gpzrXLw

- 12th Standard - Group

https://t.me/Padasalai_12th

- 11th Standard - Group

https://t.me/Padasalai_11th

- 10th Standard - Group

https://t.me/Padasalai_10th

- 9th Standard - Group

https://t.me/Padasalai_9th

- 6th to 8th Standard - Group

https://t.me/Padasalai_6to8

- 1st to 5th Standard - Group

https://t.me/Padasalai_1to5

- TET - Group

https://t.me/Padasalai_TET

- PGTRB - Group

https://t.me/Padasalai_PGTRB

- TNPSC - Group

https://t.me/Padasalai_TNPSC

'+2' Accountancy - Text book one mark Questions with Answers

MOUNT CARMEL MAT. H.S. SCHOOL
KALLAKURICHI.

chapter: 1.

① முழுமைபெறா பதிவேடுகளை பொதுவாக பராமரித்து வருவது,
(அ) சிறிய அளவிலான தனிநபர் வணிகம் (ஆ) பன்னாட்டு நிறுவனங்கள்
(இ) நிறுமம் (ஈ) அரசு

② நிலை அறிக்கை என்பது, (அ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை
(ஆ) வருமானம் மற்றும் செலவுகள் அறிக்கை (இ) கடன் நடவடிக்கை - களின் தொகுப்பு (ஈ) ரொக்க நடவடிக்கைகளின் தொகுப்பு.

③ தொடக்க நிலை அறிக்கை வழக்கமாக தயாரிக்கப்படுவது,
(அ) இறுதி முதல் கண்டறிய (ஆ) அவ்வாண்டின் இலாபம் கண்டறிய
(இ) அவ்வாண்டின் நட்டம் கண்டறிய (ஈ) தொடக்க முதல் கண்டறிய

④ பொறுப்புகளைக் காட்டிலும் மிகுதியாக உள்ள சொத்துகள்
(அ) ரொக்கம் (ஆ) நட்டம் (இ) இலாபம் (ஈ) முதல்

⑤ கீழ்க்கண்ட செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு தொடர்பான எந்த விவரம் மொத்தக் கடனீந்தோர் கணக்கிற்கு மாற்றப்படுகிறது?
(அ) அவ்வாண்டில் ஏற்கப்பட்ட செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டு
(ஆ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டுக்கு ரொக்கம் செலுத்தியது
(இ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டின் தொடக்க இருப்பு
(ஈ) செலுத்தற்குரிய மாற்றுச்சீட்டின் இறுதி இருப்பு

⑥ கடன் விற்பனைத் தொகை கணக்கிட தயாரிக்கப்படுவது,
(அ) பெறுதற்குரிய மாற்றுச்சீட்டு கணக்கு (ஆ) செலுத்தற்குரிய மாற்றுச் சீட்டு கணக்கு (இ) மொத்தக்கடனாளிகள் கணக்கு (ஈ) மொத்தக் கடனீந்தோர் கணக்கு.

⑦ முழுமை பெறா பதிவேடுகள் தொடர்பான கீழ்க்கண்ட எந்த வாக்கியம் சரியானது அல்ல?
(அ) வரி அதிகாரிகள் ஏற்றுக் கொள்வதில்லை (ஆ) இது அனைத்து வகையான அமைப்புகளுக்கும் பொருந்தும் (இ) ரொக்கம் மற்றும் ஆள்சார் கணக்குகளுக்கு மட்டும் ஏடுகள் பராமரிக்கப்படுகிறது.
(ஈ) இது நடவடிக்கைகளை பதிவு செய்யும் அறிவியல் தன்மையற்ற முறை

⑧ உரிமையாளரின் சொத்துகள் ₹ 85,000 மற்றும் பொறுப்புகள் ₹ 21,000 எனில் அவருடைய முதல் தொகை
(அ) ₹ 1,06,000 (ஆ) ₹ 85,000 (இ) ₹ 64,000 (ஈ) ₹ 21,000

⑨ தொடக்கமுதல் ₹ 10,000, அவ்வாண்டின் எடுப்புகள் ₹ 6,000, அவ்வாண்டின் இலாபம் ₹ 2,000 மற்றும் கொண்டுவந்த கூடுதல் முதல் ₹ 3,000 எனில் இறுதி முதல் காணவும்.

(அ) ₹ 11,000 (ஆ) ₹ 9,000 (இ) ₹ 3,000 (ஈ) ₹ 21,000

⑩ கடனாளிகள் தொடக்க இருப்பு : ₹ 30,000 பெற்ற ரொக்கம்: ₹ 1,00,000, கடன் விற்பனை : ₹ 90,000; கடனாளிகள் இறுதி இருப்பு: ?
(அ) ₹ 40,000 (ஆ) ₹ 30,000 (இ) ₹ 20,000 (ஈ) ₹ 1,30,000

Chapter: 2

① பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கு ஒரு,
(அ) சொத்து கணக்கு (ஆ) பெயரளவு கணக்கு (இ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு (ஈ) ஆள்சார் கணக்கு

② பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கில் பதிவு செய்யப்படும் பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள்
(அ) வருவாயினம் மற்றும் முதலினத் தன்மை உடையது (ஆ) மேற்கண்ட ஏதுமில்லை (இ) வருவாயினத் தன்மை மட்டும் உடையது
(ஈ) முதலினத் தன்மை மட்டும் உடையது

③ பெறுதல்கள் மற்றும் செலுத்தல்கள் கணக்கின் இருப்பு காட்டுவது
(அ) அந்த ஆண்டின் செலவுகளைக் காட்டிலும் மிகுதியான வருமானம்
(ஆ) அந்த ஆண்டில் ஏற்பட்ட நட்டம் (இ) அந்நாளைய ரொக்கம் மற்றும் வங்கி இருப்பு (ஈ) அந்த ஆண்டின் மொத்த ரொக்கச் செலுத்தல்கள்

④ வருவாய் மற்றும் செலவினக் கணக்கு ஒரு,
(அ) ஆள்சார் கணக்கு (ஆ) பிரதிநிதித்துவ ஆள்சார் கணக்கு
(இ) பெயரளவுக் கணக்கு (ஈ) சொத்து கணக்கு

⑤ வருவாய் மற்றும் செலவினக் கணக்கு தயாரிக்கப்படுவதின் நோக்கம் கண்டறியப்படுவது. (அ) ரொக்கம் மற்றும் வங்கி இருப்பு
(ஆ) இலாபம் அல்லது நட்டம் (இ) நிதிநிலை (ஈ) உபரி அல்லது பற்றாக்குறை

⑥ பின்வருவனவற்றில் எது வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் பதியப்படுவதில்லை? (அ) சொத்து விற்பனை மீதான நட்டம்
(ஆ) அறைகலன் விற்ற தொகை (இ) பழைய செய்தித்தாள்கள் விற்றது
(ஈ) செயலாளருக்கு வழங்கிய மதிப்பூதியம்

⑦ நடப்பாண்டில் பெற வேண்டிய சந்தா இன்னும் பெறாதது.
(அ) ஒரு பொறுப்பு (ஆ) தவிர்க்கப்பட வேண்டிய ஒன்று
(இ) ஒரு சொத்து (ஈ) ஒரு செலவு

⑧ உயில் கொடை ஒரு, (அ) வருவாயின வரவு (ஆ) வருவாயினச் செலவு (இ) முதலின வரவு (ஈ) முதலினச் செலவு

⑨ ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காக பெற்ற நன்கொடை
(அ) முதலின வரவு (ஆ) முதலினச் செலவு (இ) வருவாயின வரவு (ஈ) வருவாயினச் செலவு

⑩ ஒரு மன்றத்தில் உள்ள 500 உறுப்பினர்கள், ஆண்டு சந்தாவாக ₹100 செலுத்துகின்றனர். நடப்பாண்டில் கூடுதலாக சந்தா இன்னமும் பெறப்படாதது ₹200; முன்கூட்டியே பெற்ற சந்தா ₹300. வருவாய் மற்றும் செலவினக் கணக்கில் காட்டப்பட வேண்டிய சந்தா தொகையினைக் கண்டறியவும்.
(அ) ₹50,200 (ஆ) ₹50,000 (இ) ₹49,800 (ஈ) ₹49,900

Chapter: 3

① கூட்டாண்மை ஒப்பாவணம் இல்லாத நிலையில் நிறுவனத்தின் இலாபம் கூட்டாளிகளுக்கிடையே பகிர்ந்தளிக்கப்படுவது
(அ) இரண்டும் (அ) மற்றும் (ஆ) (ஆ) சமமான விகிதத்தில்
(இ) மேற்கூறிய எதுவுமில்லை (ஈ) முதல் விகிதத்தில்

② கூட்டாளிகளுக்கிடையே கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாத போது முதல் மீது வட்டி,
(அ) வங்கி விகிதத்தில் வழங்கப்படும் (ஆ) ஆண்டுக்கு 6% வழங்கப்படும்
(இ) வழங்கப்படுவதில்லை (ஈ) ஆண்டுக்கு 5% வழங்கப்படும்.

③ கூட்டாளிகளிடமிருந்து நிறுவனம் கடன்கள் பெற்றிருந்தால், அக்கடன்களுக்கு இந்திய கூட்டாண்மைச் சட்டம், 1932-ன் படி வழங்கப்படும் வட்டி விகிதம்
(அ) ஆண்டுக்கு 12% (ஆ) ஆண்டுக்கு 5% (இ) ஆண்டுக்கு 6%
(ஈ) ஆண்டுக்கு 8%.

④ பின்வருவனவற்றில் எது இலாப நட்டப் பகிர்வு கணக்கில் காட்டப்படும்? (அ) அலுவலகச் செலவுகள் (ஆ) வங்கிக் கடன் மீதான வட்டி (இ) பணியாளர் ஊதியம் (ஈ) கூட்டாளியின் ஊதியம்

⑤ கூட்டாண்மை நிறுவனத்தில், நிலைமுதல் முறை பின்பற்றப்படும் போது, பின்வருவனவற்றில் எது முதல் கணக்கில் காட்டப்படும்?
(அ) இலாபப் பகிர்வு (ஆ) எடுப்புகள் மீது வட்டி (இ) முதல் மீது வட்டி (ஈ) கூடுதல் முதல் கொண்டுவந்தது

⑥ ஒரு கூட்டாளி ஒவ்வொரு மாத இறுதியிலும், ஒரு குறிப்பிட்ட தொகையை வழக்கமாக எடுத்துக் கொள்ளும் போது, அந்த எடுப்புகள் மீது கணக்கிடப்படும் வட்டிக்குரிய மாதங்கள் சராசரி -யாக
(அ) 6 மாதங்கள் (ஆ) 5.5 மாதங்கள் (இ) 6.5 மாதங்கள்
(ஈ) 12 மாதங்கள்

MOUNT CARMEL MAT. H.S. SCHOOL
KALLAKURICHI.

⑦ பின்வருவனவற்றில் எது சரியற்ற இணை?
(அ) எடுப்புகள் மீது வட்டி – முதல் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும்
(ஆ) முதல் மீது வட்டி – முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்.

(இ) இலாபப் பகிர்வு – முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்
(ஈ) கடன் மீது வட்டி – முதல் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும்.

(8) கூட்டாண்மை ஒப்பந்தம் இல்லாதபோது கூட்டாளிகள் பெறத் தகுதியுடையது.
(அ) முதல் மீது வட்டி (ஆ) சம்பளம் (இ) கழிவு (ஈ) கடன் மீது வட்டி

(9) பொருந்தாத ஒன்றைத் தேர்ந்தெடுக்கவும்.
(அ) கூட்டாளிகள் முதல் மீது வட்டி ஆண்டுக்கு 7% அனுமதிக்க வேண்டும்.
(ஆ) கூட்டாளிகளிடமிருந்து பெற்ற கடன் மீதான வட்டி ஆண்டுக்கு 6% அனுமதிக்க வேண்டும்.
(இ) கூட்டாளிகள் இலாபம் மற்றும் நட்டத்தை சமமாகப் பகிர்ந்து கொள்ள வேண்டும்.
(ஈ) கூட்டாளிகளுக்கு சம்பளம் அல்லது ஊதியம் அனுமதிக்கப்பட மாட்டாது.

(10) எடுப்பு மீது வட்டி, முதல் மீது வட்டி மற்றும் ஊதியம் கழித்தபின் உள்ள இலாபம் ₹10,500. கீதா என்ற கூட்டாளி கழிவு கழித்தபின் உள்ள நிகர இலாபத்தில் 5% கழிவு பெற உரியவராயின் கழிவுத்தொகையை கண்டறியவும்.
(அ) ₹500 (ஆ) ₹550 (இ) ₹150 (ஈ) ₹50

Chapter: 4

(1) பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது?
(அ) நற்பெயர் ஒரு கற்பனைச் சொத்து (ஆ) நற்பெயரினை வாங்க முடியாது
(இ) நற்பெயர் ஒரு புலனாகாச் சொத்து (ஈ) நற்பெயர் ஒரு நடப்புச் சொத்து

(2) உயர் இலாபம் பின்வரும் இரண்டிற்கும் இடையேயுள்ள வேறுபாடாகும்.
(அ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள் (ஆ) பயன்படுத்தப்பட்ட முதல் மற்றும் சராசரி இலாபம் (இ) நடப்பு ஆண்டின் இலாபம் மற்றும் சராசரி இலாபம் (ஈ) சராசரி இலாபம் மற்றும் சாதாரண இலாபம்

(3) ஒரே வகை நிறுவனங்களின் சராசரி இலாப விகிதமாக கருதப்படுவது
(அ) இவைகளில் எதுமில்லை (ஆ) எதிர்நோக்கும் இலாப விகிதம்
(இ) சாதாரண இலாப விகிதம் (ஈ) சராசரி இலாபம்

(4) கீழ் வருவனவற்றில் எது சரியானது?
(அ) உயர் இலாபம் = சராசரி இலாபம் – சாதாரண இலாபம்
(ஆ) உயர் இலாபம் = சராசரி இலாபம் × கொள்முதல் ஆண்டுகள்
(இ) உயர் இலாபம் = மொத்த இலாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை
(ஈ) உயர் இலாபம் = கூட்டு இலாபம் / ஆண்டுகளின் எண்ணிக்கை

(5) சரியற்ற இணையினை அடையாளம் காணவும்.

(அ) கூட்டு சராசரி இலாப முறையில் நற்பெயர் = கூட்டு சராசரி இலாபம் × கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

(ஆ) சராசரி இலாப முறையில் நற்பெயர் = சராசரி இலாபம் × கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

(இ) உயர் இலாப முறையில் நற்பெயர் = உயர் இலாபம் × கொள்முதல் ஆண்டுகளின் எண்ணிக்கை

(ஈ) ஆண்டுத்தொகை முறையில் நற்பெயர் = சராசரி இலாபம் × ஆண்டுத்தொகை காரணியின் தற்போதைய மதிப்பு

(6) சராசரி இலாபம் ₹ 25,000 மற்றும் சாதாரண இலாபம் ₹ 15,000 ஆக இருக்கும் போது, உயர் இலாபம்

(அ) ₹ 10,000 (ஆ) ₹ 15,000 (இ) ₹ 25,000 (ஈ) ₹ 5,000

(7) 2017 -ல் கணக்கேட்டின்படி இலாபம் ₹ 35,000; இலாபத்தில் சேர்ந்துள்ள திரும்பத் திரும்ப நிகழா வருமானம் ₹ 1,000 மற்றும் 2017 ஆம் ஆண்டில் ஏற்பட்ட அசாதாரண நட்டம் ₹ 2,000 எனில் சரிக்கட்டப்பட்ட இலாபம்

(அ) ₹ 34,000 (ஆ) ₹ 38,000 (இ) ₹ 35,000 (ஈ) ₹ 36,000

(8) ஒரு வியாபாரத்தின் மொத்த மூலதன மதிப்பு ₹ 1,00,000; சொத்துகள் ₹ 1,50,000 மற்றும் பொறுப்புகள் ₹ 80,000. மூலதனமாக்க முறையில் நற்பெயரின் மதிப்பு

(அ) ₹ 70,000 (ஆ) ₹ 40,000 (இ) ₹ 30,000 (ஈ) ₹ 1,00,000

Chapter: 5

(1) மறுமதிப்பீட்டுக் கணக்கு ஒரு,

(அ) ஆள்சார் க/கு (ஆ) ஆள்சாரா க/கு (இ) சொத்து க/கு (ஈ) பெயரளவு க/கு

(2) மறுமதிப்பீட்டில் சொத்துகளின் மதிப்பு உயர்வது

(அ) இவற்றுள் ஏதுமில்லை (ஆ) செலவு (இ) நட்டம் (ஈ) ஆதாயம்

(3) சொத்துகள் மற்றும் பொறுப்புகளை மறுமதிப்பீடு செய்யும் போது ஏற்படும் இலாபம் அல்லது நட்டம் யாருடைய முதல் கணக்கிற்கு மாற்றப்படுகிறது? (அ) புதிய கூட்டாளி (ஆ) பழைய கூட்டாளிகள் (இ) தியாகம் செய்த கூட்டாளிகள் (ஈ) அனைத்து கூட்டாளிகள்

(4) கூட்டாளியின் புதிய இலாபப்பகிர்வை விட பழைய இலாபப் பகிர்வு அதிகமாக இருந்தால் அவ்வேறுபாடு அழைக்கப்படுவது

(அ) இவற்றுள் ஏதுமில்லை (ஆ) ஆதாய விகிதம் (இ) தியாக விகிதம் (ஈ) முதல் விகிதம்.

MOUNT CARMEL MAT. HSS. SCHOOL KALLAKURICHI.

(5) கூட்டாளி சேர்ப்பின்போது நற்பெயரானது மதிப்பீடு செய்யப்பட்டு யாருடைய முதல் கணக்கில் வரவு வைக்கப்பட வேண்டும்.

(அ) புதிய கூட்டாளி (ஆ) தியாகம் செய்த கூட்டாளிகள்

(இ) அனைத்து கூட்டாளிகள் (ஈ) பழைய கூட்டாளிகள்

(6) கூட்டாளி சேர்ப்பு தொடர்பாக பின்வரும் கூற்றுகளில் எது உண்மையானதல்ல?

(அ) முந்தைய ஆண்டுகளின் இலாபம் மற்றும் நட்டங்கள் பழைய கூட்டாளிகளுக்கு பகிர்ந்தளிக்கப்பட வேண்டும்.

(ஆ) பொதுவாக கூட்டாளிகளின் பரஸ்பர உரிமைகள் மாறும்

(இ) ஏற்கனவே உள்ள ஒப்பந்தமானது முடிவுக்கு கொண்டு வரப்படாது.

(ஈ) கூட்டாண்மை நிறுவனமானது புதிய ஒப்பந்தத்தின் கீழ் மறு கட்டமைக்கப்படும்.

(7) பட்டியல் I ஐ மற்றும் பட்டியல் II உடன் ஒப்பிடு செய்து சரியான விடையை கீழே கொடுக்கப்பட்டுள்ள சரியான குறியீட்டைப் பயன்படுத்தி தேர்வு செய்யவும்.

பட்டியல் I	பட்டியல் - II
(i) தியாக விகிதம்	1. முதலீட்டு மாறுபடும் நிதி
(ii) பழைய இலாபப் பகிர்வு விகிதம்	2. பகிர்ந்தரா இலாபம்
(iii) மறுமதிப்பீட்டு கணக்கு	3. நற்பெயர்
(iv) முதல் கணக்கு	4. பதிவுறா பொறுப்பு.

	(i)	(ii)	(iii)	(iv)
(அ)	4	3	2	1
(ஆ)	3	1	4	2
(இ)	1	2	3	4
(ஈ)	3	2	4	1

(8) பொருந்தாத ஒன்றை தேர்ந்தெடுக்கவும்.

(அ) முதலீட்டு மாறுபடும் நிதி (ஆ) புதிய கூட்டாளி கொண்டு வந்த நற்பெயர் (இ) பகிர்ந்தளிக்கப்படாத இலாபம்

(ஈ) மறுமதிப்பீட்டு இலாபம்

(9) ஜெகன் மற்றும் கமல் இலாப நட்டங்களை 5 : 3 என்ற விகிதத்தில் பகிர்ந்து கொள்கின்றனர். அவர்கள் அகில் என்பவரை 1/5 இலாப பங்கிற்கு கூட்டாளியாக சேர்த்துக் கொண்டனர்.

www.Padasalai.Net www.TrbTnpsc.com

தியாக விகிதத்தை கணக்கிடவும்.

(அ) 5:3 (ஆ) 3:5 (இ) 1:3 (ஈ) 3:1

⑩ பாலாஜி மற்றும் கமலேஷ் கூட்டாளிகள். இலாப நட்டங்களை 2:1 என்ற விகிதத்தில் பகிர்ந்துகொண்டனர். அவர்கள் யோகேஷ் என்பவரை கூட்டாண்மையில் சேர்த்துக் கொண்டனர். பாலாஜி, கமலேஷ் மற்றும் யோகேஷின் புதிய இலாபப் பகிர்வு விகிதம் 3:1:1 பாலாஜி மற்றும் கமலேஷின் தியாக விகிதத்தைக் கணக்கிடவும்.

(அ) 1:2 (ஆ) 1:3 (இ) 3:1 (ஈ) 2:1

chapter: 6

① கூட்டாளி ஒருவர் ஜூன் 30 அன்று கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து விலகுகிறார். அவர் கூட்டாண்மை நிறுவனத்தின் அனைத்து செயல்களுக்கும் பொறுப்பாவார், (அ) முந்தைய கணக்காண்டின் இறுதி வரைக்கும் (ஆ) நடப்பு கணக்காண்டின் இறுதி வரைக்கும் (இ) கூட்டாளியின் கணக்கைத் தீர்வு செய்யும் வரைக்கும் (ஈ) கூட்டாளி விலகும் நாள் வரைக்கும்.

② கூட்டாண்மை நிறுவனத்திலிருந்து கூட்டாளி விலகலின் போது பகிர்ந்து தரா இலாபங்கள் மற்றும் நட்டங்கள் கூட்டாளிகளுக்கு இந்த அடிப்படையில் பகிரப்படுகிறது.

(அ) ஆதாய விகிதம் (ஆ) தியாக விகிதம் (இ) புதிய இலாபப் பகிர்வு விகிதம் (ஈ) பழைய இலாபப் பகிர்வு விகிதம்

③ கூட்டாளி விலகலின் போது பொதுக்காப்பு மாற்றப்படுவது

(அ) தொடரும் கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு (ஆ) நினைவுக் குறிப்பு மறுமதிப்பீட்டு கணக்கிற்கு (இ) அனைத்து கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு (ஈ) மறுமதிப்பீட்டுக் கணக்கிற்கு

④ மறுமதிப்பீட்டின் போது, பொறுப்புகளின் அதிகரிப்பு தருவது

(அ) மேற்கண்ட எதுவுமில்லை (ஆ) இலாபம் (இ) நட்டம் (ஈ) ஆதாயம்.

⑤ ஒரு கூட்டாளி விலகலின் போது, ஆதாய விகிதத்தின் நிர்ணயம் எதற்கு தேவைப்படுகிறது?

(அ) மேற்கண்ட எதுவுமில்லை (ஆ) நற்பெயரை சரிக்கட்டுவதற்கு,

(இ) பகிர்ந்துதரா இலாபங்கள் மற்றும் நட்டங்களை பகிர்ந்தளிப்பதற்கு

(ஈ) மறுமதிப்பீட்டு இலாபம் அல்லது நட்டம் மாற்றப்படுவதற்கு.

Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

⑥ வெளியேறும் கூட்டாளிக்குரிய தீர்வுத்தொகை உடனடியாக செலுத்தாதபோது அது மாற்றப்படும் கணக்கு, (அ) வெளியேறும் கூட்டாளியின் கடன் க/கு
(ஆ) பிற கூட்டாளிகளின் முதல் க/கு (இ) வங்கி க/கு
(ஈ) வெளியேறும் கூட்டாளியின் முதல் க/கு.

⑦ ஒரு கூட்டாண்மை நிறுவனத்தின் கூட்டாளியாக இருந்த 'A' என்பவர் 2019, மார்ச் 31 அன்று இறந்து விட்டார். அவருக்கு செலுத்த வேண்டிய இறுதித்தொகை ₹ 25,000 உடனடியாகச் செலுத்தப்பட வில்லை. அது மாற்றப்பட வேண்டிய கணக்கு
(அ) A-ன் கடன் கணக்கு (ஆ) A-ன் முதல் கணக்கு
(இ) A-ன் நிறைவேற்றாளர் கடன் கணக்கு (ஈ) A-ன் நிறைவேற்றாளர் கணக்கு.

⑧ A, B மற்றும் C என்ற கூட்டாளிகள் 2:2:1 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தை பகிர்ந்து வந்தனர். B-ன் விலகலின் போது நிறுவனத்தின் நற்பெயர் ₹ 30,000 என மதிப்பிடப்பட்டது. கூட்டாளி B-க்கு ஈ.டு செய்வதற்கு A மற்றும் C-யின் பங்களிப்பைக் கண்டறியவும்.
(அ) ₹ 10,000 மற்றும் ₹ 20,000 (ஆ) ₹ 15,000 மற்றும் ₹ 15,000
(இ) ₹ 20,000 மற்றும் ₹ 10,000 (ஈ) ₹ 8,000 மற்றும் ₹ 4,000

⑨ A, B மற்றும் C என்ற கூட்டாளிகள் 4:2:3 என்ற விகிதத்தில் இலாப நட்டத்தை பகிர்ந்து வந்தனர். தற்போது C விலகுகிறார். A மற்றும் B-யின் புதிய இலாபப் பகிர்வு விகிதம்
(அ) 3:4 (ஆ) 4:3 (இ) 1:2 (ஈ) 2:1

⑩ X, Y மற்றும் Z என்ற கூட்டாளிகள் இலாப நட்டங்களை சமமாகப் பகிர்ந்து வந்தனர். 2019, ஏப்ரல் 1 அன்று X இறந்துவிட்டார். 2018 இன் இலாபம் ₹ 36,000 என்ற அடிப்படையில் 2019 ஆம் ஆண்டுக்குரிய இலாபத்தில் X-ன் பங்கினைக் கண்டறியவும்.
(அ) ₹ 12,000 (ஆ) ₹ 36,000 (இ) ₹ 12,000 (ஈ) ₹ 3,000

MOUNT CARMEL MAT. H.S. SCHOOL
KALLAKURICHI.

www.Padasalai.Net

www.TrbTnpsc.com

chapter: 7

① முன்னுரிமைப் பங்கு என்பது, (i) நிலையான விகிதத்தில் பங்காதாயம் செலுத்துவதற்கான முன்னுரிமையைப் பெற்ற பங்கு
(ii) கலைப்பின் போது பங்கு முதலை திரும்பப் பெறுவதற்கான முன்னுரிமையைப் பெற்ற பங்கு

(அ) (i) மற்றும் (ii) சரியானது (ஆ) (i) மற்றும் (ii) தவறானவை
(இ) (i) மட்டும் சரியானது (ஈ) (ii) மட்டும் சரியானது

② நிறுமக் கலைப்பின்போது மட்டுமே அழைக்கப்படக் கூடிய பங்கு முதலின் ஒரு பகுதி இவ்வாறு அழைக்கப்படும்.
(அ) காப்பு முதல் (ஆ) முதலினக் காப்பு (இ) அழைக்கப்பட்ட முதல்
(ஈ) அங்கீகரிக்கப்பட்ட முதல்

③ ஒறுப்பிழப்பு செய்யும் போது பங்கு முதல் கணக்கு எதில் பற்று வைக்கப்படுகிறது? (அ) பெயரளவு மதிப்பு (ஆ) முகமதிப்பு
(இ) அழைக்கப்பட்ட தொகை (ஈ) செலுத்தப்பட்ட தொகை.

④ ஒறுப்பிழப்புச் செய்த பங்குகளை மறுவெளியீடு செய்த பிறகு, பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கின் இருப்பு மாற்றப்படுவது,
(அ) பத்திர முனைமக் கணக்கிற்கு (ஆ) உபரி கணக்கிற்கு
(இ) பொதுக்காப்பு கணக்கிற்கு (ஈ) முதலினக் காப்பு கணக்கிற்கு

⑤ முகமதிப்பைவிட அதிகமாக பெற்ற தொகை வரவு வைக்கப்படும் கணக்கு, (அ) பங்கு ஒறுப்பிழப்புக் கணக்கு
(ஆ) பங்குமுதல் கணக்கு (இ) அழைப்பு முன்பணக் கணக்கு
(ஈ) பத்திர முனைமக் கணக்கு.

⑥ பின்வரும் வாக்கியங்களில் எது தவறானது?
(அ) பங்குகள் குறை ஒப்பமாக இருக்கும் நிலையில் வெளியிடப்பட்ட பங்குமுதல், ஒப்பிய பங்கு முதலைவிட குறைவாக இருக்கும்.
(ஆ) வெளியிடப்பட்ட பங்குமுதல் அங்கீகரிக்கப்பட்ட பங்குமுதலை விட ஒருபோதும் அதிகமாக இருக்கக் கூடாது.
(இ) செலுத்தப்பட்ட பங்குமுதல், அழைக்கப்பட்ட பங்கு முதலின் ஒரு பகுதி ஆகும்.
(ஈ) காப்பு முதல் நிறுமத்தை கலைக்கும் போது செலுத்துமாறு அழைப்பு விடுக்கப்படுகிறது.

Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

7. சொத்துக்களை வாங்கி பங்குகள் வெளியிடும் போது வரவு வைக்கப்படும் கணக்கு.

(அ) பற்பல சொத்துக்கள் க/கு (ஆ) பங்குமுதல் க/கு (இ) வங்கி க/கு

(ஈ.) விற்பனையாளர் க/கு

8. சரியான குறியீட்டைப் பயன்படுத்தி பொருத்தமான இணையை தேர்ந்தெடுக்கவும்.

(A) குறை ஒப்பம் – (i) முன்கூட்டியே செலுத்திய அழைப்பு பணம்

(B) மிகை ஒப்பம் – (ii) வெளியிட்ட பங்குகளை விட அதிகமாக ஒப்பப்பட்டது

(C) அழைப்பு நிலுவை – (iii) வெளியிட்ட பங்குகளை விட குறைவாக ஒப்பப்பட்டது

(D) அழைப்பு முன்பணம் – (iv) செலுத்தப்பெறாத அழைப்பு பணம்

	(A)	(B)	(C)	(D)
(அ)	(iii)	(ii)	(iv)	(i)
(ஆ)	(i)	(ii)	(iii)	(iv)
(இ)	(iii)	(iv)	(i)	(ii)
(ஈ.)	(iv)	(iii)	(ii)	(i)

9. ₹8 செலுத்தப்பட்ட, ₹10 மதிப்புள்ள பங்கு ஒறுப்பிழப்பு செய்யப்பட்டதெனில், அதன் குறைந்த அளவு மறுவெளியீட்டு விலை,

(அ) பங்கொன்று ₹5 (ஆ) பங்கொன்று ₹10

(இ) பங்கொன்று ₹2 (ஈ.) பங்கொன்று ₹8

10. சுப்ரீம் நிறுமம் பங்கொன்று ₹10 மதிப்புடைய 100 பங்குகளை இறுதி அழைப்புத்தொகை ₹2 செலுத்தாததால் ஒறுப்பிழப்பு செய்தது. அவை அனைத்தும் பங்கொன்று ₹9 வீதம் மறுவெளியீடு செய்யப்பட்டன. முதலினக் காப்புக்கு மாற்றப்பட வேண்டிய தொகை:

(அ) ₹800 (ஆ) ₹700 (இ) ₹1,000 (ஈ.) ₹900

Chapter: 8

1. பின்வரும் வாக்கியங்களில் எது சரியானதல்ல?

(அ) குறிப்புகள் மற்றும் பட்டியல்களும் நிதிநிலை அறிக்கைகளின் பகுதி ஆகின்றன.

Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

(ஆ) பொது அளவு அறிக்கை சில பொது அடிப்படைகளைக் கொண்டு பல்வேறு இனங்களின் தொடர்பினைக் காட்டுவதாகும். இவ்வினங்கள், பொது அளவு அடிப்படையின் சதவிகிதமாக காட்டப்படுகின்றன.
(இ) நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வின் கருவிகளில் பொது அளவு அறிக்கை உள்ளடங்கும்.
(ஈ) போக்குப் பகுப்பாய்வு என்பது ஆராண்டில் தொகைகளில் ஏற்படும் மாற்றங்களை ஆய்வு செய்தலைக் குறிப்பதாகும்.

② இருப்புநிலைக் குறிப்பு, வணிக நிறுவனத்தின் நிதிநிலை பற்றிய ——— தகவல்களை வழங்குகிறது.
(அ) ஒரு குறிப்பிட்ட நாளுக்குரிய (ஆ) ஒரு காலக்கட்டத்திற்கு மேலான (இ) குறிப்பிட்ட கணக்காண்டிற்குரிய (ஈ) ஒரு குறிப்பிட்ட காலத்திற்கான.

③ நிதிநிலை அறிக்கைகள் பகுப்பாய்வின் பின்வரும் எந்த கருவி பல்வேறு ஆண்டுகளுக்கான விவரங்களை பகுப்பாய்வு செய்வதற்கு ஏற்புடையதாகும்?
(அ) ஒப்பீட்டு அறிக்கை (ஆ) போக்கு ஆய்வு (இ) ரொக்க ஓட்ட பகுப்பாய்வு (ஈ) பொது அளவு அறிக்கை

④ நிதிநிலை அறிக்கைகள் வெளிக்காட்டாதது.
(அ) கடந்த கால தகவல்கள் (ஆ) பணம்சாரா தகவல்கள்
(இ) நீண்ட கால தகவல்கள் (ஈ) இறுதிய கால தகவல்கள்

⑤ பின்வருவனவற்றில் எது நிதிநிலைப் பகுப்பாய்வின் ஒரு கருவி அல்ல? (அ) பொது அளவு அறிக்கை (ஆ) போக்குப் பகுப்பாய்வு
(இ) நிர்ணயிக்கப்பட்ட அடக்கவிலையின் (ஈ) ஒப்பீட்டு அறிக்கை

⑥ நிதி என்னும் சொல் குறிப்பிடுவது, (அ) நடைமுறை முதல்
(ஆ) நடப்புப் பொறுப்புகள் (இ) நீண்டகாலச் சொத்துகள்
(ஈ) நிலைச் சொத்துகள்

⑦ பின்வரும் வாக்கியங்களில் எது சரியானது அல்ல?
(அ) நிதிநிலை அறிக்கை பகுப்பாய்வு ஒரு வழிமுறை, இது ஒரு முடிவல்ல. (ஆ) நிதிநிலை அறிக்கையின் குறைபாடுகள் அனைத்தும் நிதிநிலை அறிக்கைகள் பகுப்பாய்விற்கும் பொருந்தும்.
(இ) ஆய்வு செய்யப்பட்ட தகவல்களை உய்த்துணர்வது தனிப்பட்ட கருத்துக்களை உள்ளடக்கியதாகும்.
(ஈ) நிதிநிலை அறிக்கை பகுப்பாய்விற்கு நிபுணத்துவம் தேவையில்லை.

(8) ஒரு வரையறு நிறுமத்தின் விற்பனை ₹ 125,000 லிருந்து ₹ 1,50,000 க்கு அதிகரித்துள்ளது. இது ஒப்பீட்டு வருமான அறிக்கையில் எவ்வாறு தோன்றுகிறது?

(அ) +120% (ஆ) −120% (இ) −20% (ஈ) +20%

(9) ஒரு பொது அளவு இருப்பு நிலைக் குறிப்பில், நீண்டகாலச் சொத்துகளின் சதவீதம் 75 எனில், நடப்புச் சொத்துகளின் சதவீதம் என்னவாகும்?

(அ) 125 (ஆ) 175 (இ) 100 (ஈ) 25

(10) ஒரு வணிகத்தின் முதலாம் ஆண்டுச் செலவுகள் ₹ 80,000. இரண்டாம் ஆண்டில் செலவுகள் ₹ 88,000 ஆக அதிகரித்துள்ளது. இரண்டாம் ஆண்டின் போக்கு விகிதம் என்ன?

(அ) 110% (ஆ) 10% (இ) 11% (ஈ) 90%

Chapter: 9

(1) ஒரு இனம் மற்றொரு இனத்தோடு பெற்றிருக்கும் தொடர்பினை கணிதவியல் முறையில் கூறுவது.

(அ) விகிதம் (ஆ) முடிவு (இ) தீர்மானம் (ஈ) மாதிரி

(2) நடப்பு விகிதம் காட்டுவது.

(அ) இலாபம் ஈட்டும் திறன் (ஆ) நீண்டகாலக் கடன் தீர்க்கும் திறன் (இ) குறுகிய காலக் கடன் தீர்க்கும் திறன் (ஈ) மேலாண்மை திறன்

(3) சரக்கிருப்பு மற்றும் முன்கூட்டிச் செலுத்திய செலவுகள் நீங்கலாக உள்ள நடப்புச் சொத்துகள் அழைக்கப்படுவது

(அ) விரைவு சொத்துகள் (ஆ) நிதி (இ) புலனாகும் சொத்துகள் (ஈ) காப்புகள்

(4) புற அக பொறுப்புகள் அளவிடுவது.

(அ) இலாபம் ஈட்டும் திறன் (ஆ) செயல்திறன் (இ) குறுகிய காலக் கடன் தீர்க்கும் திறன் (ஈ) நீண்டகாலக் கடன்தீர்க்கும் திறன்

(5) பட்டியல் ஒன்றை பட்டியல் இரண்டுடன் பொருத்தி கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டைப் பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

பட்டியல் I	பட்டியல் II
(i) நடப்பு விகிதம்	(1) நீர்மைத் தன்மை
(ii) நிகர இலாப விகிதம்	(2) செயல் திறன்
(iii) புற அக பொறுப்புகள் விகிதம்	(3) நீண்டகால கடன் தீர்க்கும் திறன்
(iv) சரக்கிருப்பு சுழற்சி விகிதம்	(4) இலாபத் தன்மை

www.Padasalai.Net www.TrbTnpsc.com

குறியீடுகள் :

	(i)	(ii)	(iii)	(iv)
(அ)	3	2	4	1
(ஆ)	1	2	3	4
(இ)	1	4	3	2
(ஈ)	4	3	2	1

(6) ஒரு நிறுவனத்தின் நீர்மைத்தன்மையை சோதிக்க கீழ்க்கண்ட எந்த விகிதங்கள் பயன்படுகின்றன? (i) விரைவு விகிதம் (ii) நிகர இலாப விகிதம் (iii) புற அக பொறுப்புகள் விகிதம் (iv) நடப்பு விகிதம். கீழே கொடுக்கப்பட்டுள்ள குறியீட்டைப் பயன்படுத்தி சரியான விடையைத் தேர்ந்தெடுக்கவும்.

(அ) (i) மற்றும் (iv) (ஆ) (ii) மற்றும் (iii) (இ) (ii) மற்றும் (iv)
(ஈ) (i) மற்றும் (ii)

(7) பங்குதாரர் நிதிக்கும் மொத்த சொத்துக்களுக்கும் உள்ள விகிதாச்சாரம்.

(அ) புற அக பொறுப்பு விகிதம் (ஆ) நடப்பு விகிதம் (இ) உரிமையாளர் விகிதம் (ஈ) மூலதன உந்துதிறன் விகிதம்

(8) பின்வருவனவற்றில் சரியாகப் பொருந்தாதது எது?

(அ) புற அக பொறுப்புகள் விகிதம் - விகிதாச்சாரம்
(ஆ) நீர்மை விகிதம் - விகிதாச்சாரம்
(இ) மொத்த இலாப விகிதம் – சதவீதம்
(ஈ) நிலைச் சொத்துகள் சுழற்சி விகிதம் – சதவீதம்

(9) நடப்புப் பொறுப்பு ₹ 40,000; நடப்புச் சொத்து ₹ 1,00,000; சரக்கிருப்பு ₹ 20,000 எனில் விரைவு விகிதம்

(அ) 2:1 (ஆ) 1:2 (இ) 1:1 (ஈ) 2.5:1

(10) விற்பனை மூலம் பெற்ற வருவாய்க்கான அடக்கவிலை ₹ 3,00,000; அவ்வாண்டின் தொடக்கச் சரக்கிருப்பு ₹ 60,000; அவ்வாண்டின் இறுதிச் சரக்கிருப்பு ₹ 40,000 எனில் சரக்கிருப்பு சுழற்சி விகிதம்

(அ) 8 மடங்கு (ஆ) 6 மடங்கு (இ) 3 மடங்கு
(ஈ) 2 மடங்கு.

MOUNT CARMEL MAT. H.S. SCHOOL
KALLAKURICHI.
K. SAMYNATHAN. M.SC., B.Ed.,

Send Your Questions and Answers to Our Email Id - padasalai.net@gmail.com

Chapter: 10

① பயனரின் தேவைக்கேற்ப தயாரிக்கப்படும் கணக்கியல் அறிக்கையானது
(அ) இருப்பாய்வு (ஆ) இருப்புநிலைக் குறிப்பு (இ) வழக்கமான கணக்கியல் அறிக்கை (ஈ) குறிப்பிட்ட நோக்க அறிக்கை

② F11 எனும் பயன்பாடு, (அ) கணக்கியல் சான்றாவணங்கள்
(ஆ) நிறுவனப் பண்புகூறுகள் (இ) இவைகளில் எதுவும் இல்லை
(ஈ) நிறுவன கட்டமைப்பு.

③ குழுக்கள், பேரேடுகள் மற்றும் சான்றாவண வகைகளை Tally-யின் எந்த தலைப்பட்டியல் காண்பிக்கும்?
(அ) கணக்கு தகவல் (ஆ) நிறுவன தகவல் (இ) கணக்கியல் சான்றாவணங்கள் (ஈ) சரக்கிருப்பு சான்றாவணங்கள்

④ Tally-ல் முன்பே வரையறுக்கப்பட்ட பேரேடு(கள்)?
(i) ரொக்கம் (ii) இலாப நட்டக் க/கு (iii) முதல் க/கு
(அ) (i) மற்றும் (ii) இவை இரண்டும் (ஆ) (i) மட்டும்
(இ) (ii) மற்றும் (iii) இவை இரண்டும் (ஈ) (ii) மட்டும்

⑤ எதிர்ப்பதிவு சான்றாவணம் எதற்காகப் பயன்படுத்தப்படுகிறது?
(அ) அலுவலக பயன்பாட்டிற்காக வங்கியில் இருந்து எடுத்த ரொக்கம்
(ஆ) தலைமைப் பதிவு (இ) சொத்துகள் கடனுக்கு வாங்கியது
(ஈ) அறிக்கைகள்

⑥ Tally-ல் எது முன்கூட்டியே வரையறுக்கப்படாத குழு?
(அ) மூலதனம் க/கு (ஆ) விற்பனை க/கு (இ) கொடுபட வேண்டிய செலவு க/கு (ஈ) அனாமத்து க/கு

⑦ சம்பளக் கணக்கு பின்வரும் எந்த தலைப்பின் கீழ் வரும்?
(அ) மறைமுக வருமானங்கள் (ஆ) மறைமுக செலவினங்கள்
(இ) நேரடி வருமானங்கள் (ஈ) நேரடி செலவினங்கள்

⑧ அலுவலகப் பயன்பாட்டிற்காக ₹ 25,000 வங்கியில் இருந்து எடுக்கப்பட்டது. எந்த வகை சான்றாவணத்தில் அந்த நடவடிக்கை பதியப்படும்? (அ) எதிர்ப்பதிவு சான்றாவணம் (இ) பெறுதல்கள் சான்றாவணம் (ஆ) விற்பனை சான்றாவணம். (ஈ) செலுத்தல்கள்

⑨ அறைகலன் கடனுக்கு வாங்கியதை Tally-ல் எந்த வகை சான்றாவணத்தில் பதியப்படும்?
(அ) உரிய குறிப்பேடு சான்றாவணம் (ஆ) கொள்முதல் சான்றாவணம்
(இ) பெறுதல்கள் சான்றாவணம் (ஈ) செலுத்தல்கள் சான்றாவணம்

⑩ Tally-யின் நுழைவாயிலிலிருந்து இருப்பாய்வை பார்வையிட எந்த விருப்பத்தேர்வு பயன்படும்?
(அ) Gateway of Tally → Reports → Trial balance
(ஆ) Gateway of Tally → Reports → Display → Trial balance
(இ) Gateway of Tally → Trial balance
(ஈ) இவைகளில் எதுமில்லை.

ANSWERS

Chapter: 1

① (அ) தூய்ய அளவிலான தனிநபர் வணிகம்
② (அ) சொத்துகள் மற்றும் பொறுப்புகள் அறிக்கை
③ (ஈ) தொடக்க முதல் கண்டறிய
④ (ஈ) முதல்
⑤ (அ) அவ்வாண்டில் ஏற்கப்பட்ட சமநுத்தரிய மாற்றுத் திட்டம்
⑥ (இ) மொத்த கடனாளிகள் கணக்கு
⑦ (ஆ) இது அனைத்து வகையான அமைப்புகளுக்கும் பொருந்தும்
⑧ (இ) ₹ 64,000
⑨ (ஆ) ₹ 9,000
⑩ (இ) ₹ 20,000

Chapter: 2

① (அ) சொத்து கணக்கு
② (அ) வருவாயினம் மற்றும் முதலினத் தன்மை உடையது.
③ (இ) அந்நாளைய ரொக்க மற்றும் வங்கி இருப்பு.
④ (இ) பெயரளவுக் கணக்கு
⑤ (ஈ) உபரி அல்லது பற்றாக்குறை
⑥ (ஆ) அறைகளின் வாடகை தொகை
⑦ (இ) ஒரு சொத்து
⑧ (இ) முதலின வரவு
⑨ (அ) முதலின வரவு
⑩ (ஆ) ₹ 50,000

Chapter: 3

① (ஆ) சமான விகிதத்தில்
② (இ) வழங்கப்படுவதில்லை
③ (இ) ஆண்டுக்கு 6%
④ (ஈ) கூட்டாளியின் ஊதியம்
⑤ (ஈ) கூடுதல் முதல் கொண்டுவந்தது
⑥ (அ) 6 மாதங்கள்
⑦ (ஈ) கடன் மீது வட்டி - முதல் கணக்கில் பற்று வைக்கப்பட வேண்டும்
⑧ (ஈ) கடன் மீது வட்டி
⑨ (அ) கூட்டாளிகள் முதல் மீது வட்டி ஆண்டுக்கு 7% அனுமதிக்க வேண்டும்
⑩ (அ) ₹ 500

Chapter: 4

① (இ) நற்பெயர் ஒரு புலனாகச் சொத்து
② (ஈ) சராசரி இலாபம் மற்றும் சாதாரண இலாபம்
③ (இ) சாதாரண இலாப விகிதம்
④ (அ) உயர் இலாபம் = சராசரி இலாபம் - சாதாரண இலாபம்
⑤ (ஈ) ஆண்டுத் தொகை முறையில் நற்பெயர் = சராசரி இலாபம் × ஆண்டுத் தொகை காரணியின் தற்போதைய மதிப்பு
⑥ (அ) ₹ 10,000
⑦ (ஈ) ₹ 36,000
⑧ (இ) ₹ 30,000

Chapter: 5

① (ஈ) பெயரளவு க/கு
② (ஈ) ஆதாயம்
③ (ஆ) பழைய கூட்டாளிகள்
④ (இ) தியாக விகிதம்
⑤ (ஆ) தியாகம் செய்த கூட்டாளிகள்
⑥ (இ) ஏற்கனவே உள்ள ஒப்பந்தமான -து முடிவுக்கு கொண்டு வரப்படாது
⑦ (ஈ) 3 2 4 1
⑧ (ஆ) புதிய கூட்டாளி கொண்டு வந்த நற்பெயர்
⑨ (அ) 5:3
⑩ (அ) 1:2

Chapter: 6

① (ஈ) கூட்டாளி விலகும் நாள் வரைக்கும்.
② (ஈ) பழைய இலாபப் பகிர்வு விகிதம்
③ (இ) அனைத்து கூட்டாளிகளின் முதல் கணக்கிற்கு

④ (ஆ) நட்டம்
⑤ (இ) நற்பெயரை சரிக்கட்டுவதற்கு
⑥ (அ) விலகும் கூட்டாளியின் கடன்கு
⑦ (ஈ) A-ன் நிறைவேற்றாளர் கடன் கணக்கு
⑧ (ஈ) ₹ 8,000 மற்றும் ₹ 4,000
⑨ (ஈ) 2:1
⑩ (ஈ) ₹ 3,000

chapter: 7

① (அ) (i) மற்றும் (ii) சரியானவை
② (அ) காப்பு முதல்
③ (இ) அழைக்கப்பட்ட தொகை
④ (ஈ) முதலினக் காப்பு கணக்கிற்கு
⑤ (ஈ) பத்திர முனைமக் கணக்கு
⑥ (அ) பங்குகள் குறை ஒப்பமாக இருக்கும் நிலையில் வெளியிடப்பட்ட பங்குகளில், ஒப்பிய பங்குகளைவிட குறைவாக இருக்கும்.
⑦ (ஆ) பங்கு முதல் க/கு
⑧ (அ) (iii) (ii) (iv) (i)
⑨ (இ) பங்கொன்று ₹ 2
⑩ (ஆ) ₹ 700

chapter: 8

① (ஈ) போக்குப் பகுப்பாய்வு என்பது ஆண்டுகளில் தொகைகளில் ஏற்படும் மாற்றங்களை ஆய்வு செய்வதைக் குறிப்பதாகும்.
② (அ) ஒரு குறிப்பிட்ட நாளைக்குரிய
③ (ஆ) போக்கு ஆய்வு
④ (ஆ) பணம் சாரா தகவல்கள்
⑤ (இ) நிர்ணயிக்கப்பட்ட அடக்க விலையில்
⑥ (அ) நடைமுறை முதல்
⑦ (ஈ) நிதிநிலை அறிக்கை பகுப்பாய்விற்கு நிபுணத்துவம் தேவையில்லை
⑧ (ஆ) 175
⑨ (ஈ) 25
⑩ (அ) 110 %

chapter: 9

① (அ) விகிதம்
② (இ) குறுகிய காலக் கடன் தீர்க்கும் திறன்
③ (அ) விரைவு சொத்துகள்
④ (ஈ) நீண்ட காலக் கடன் தீர்க்கும் திறன்
⑤ (இ) 1 4 3 2
⑥ (அ) (ii) மற்றும் (iv)
⑦ (இ) உரிமையாளர் விகிதம்
⑧ (ஈ) நிலைச் சொத்துகள் சுழற்சி விகிதம் — சதவீதம்
⑨ (அ) 2:1
⑩ (ஆ) 6 மடங்கு

chapter: 10

① (ஈ) குறிப்பிட்ட நோக்க அறிக்கை
② (ஆ) நிறுவனப் பணிப்பு கூறுகள்
③ (அ) கணக்கு தகவல்
④ (அ) (i) மற்றும் (ii) இவை இரண்டும்
⑤ (அ) அலுவலக பயன்பாட்டுக்காக வங்கியில் இருந்து எடுத்த ரொக்கம்
⑥ (இ) கொடுபட வேண்டிய செலவு க/கு
⑦ (ஆ) மறைமுக செலவினங்கள்
⑧ (அ) எதிர் பதிவு சான்றாவணம்
⑨ (அ) உரிய குறிப்பேடு சான்றாவணம்
⑩ (ஆ) Gateway of Tally → Reports → Display → Trial balance

K. SAMYNATHAN. M.Sc., B.Ed.,
செல்: 9047981224
MOUNT CARMEL MAT. H.S. SCHOOL
KALLAKURICHI.

⇒ ALL THE BEST